முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 05 ஞாயிறு 221 ஆங்கீரச ஆனி 21 (05.07.1992) ஞாயிறு

பிச்சை எடுத்துச் சீவிக்கும் அம்பாறை தமிழ் அகதிகள்

அம்பாறை மாவட்டத்தில் அகதிகள் முகாமிற்கு வெளியே தங்கியிருக்கின்ற தமிழ் அகதிகள் உண்ண உணவற்ற நிலையில் அப்பகுதியில் பிச்சை எடுத்து சீவித்துவருகின்றனர். முகாமிற்கு வெளியேயிருந்த அகதிகளுக்கு அரசு வழங்கிவந்த நிவாரணம் நிறுத்தப்பட்டதன் காரணமாகவே அகதிகள் பிச்சை எடுத்து வருகிறார்கள். கல்லோயா, மல்லத்தை ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து திருக்கோவில், அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் பெருமளவில் தங்கியிருந்த தமிழ் அகதிகளே கடந்த ஐந்து மாதங்களாக பிச்சை எடுத்து சீவிக்கின்றனர். 07

புலிகளின் பகுதியில் சண்டை தொடர்கிறது

விமானங்கள் கடும் குண்டு வீச்சு

புலிகளின் பகுதியில் நேற்று மீண்டும் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் தொடர்ந்தும் கடும் போர் மூண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒபரேஷன் பலவேகய - 2 இராணுவ நடவடிக்கையாக புலிகளின் பகுதியில் இராணுவத்தினர் நேற்று இரு தடவைகள் முன்னேற முயன்ற போது அவர்களுக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் போர் மூண்டது.

இதேநேரம் பச்சிலைப்பள்ளிப்பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணம் இருந்தன

நேற்றுக்காலையில் படையினர் வல வாகனங்களின் உதவியுடன் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு முன்னேற முயன்ற போது புலிகள் பதில் தாக்குதல்களைத் தொடுத்தவண்ணம் இருந்தனர். 47, 07

சுன்னாகத்தில் குண்டு வீச்சு ஒருவர் பலி; ஆறுபேர் காயம்

சுன்னாகத்தில் நேற்று மாலை 5 மணியளவில் முத்து கிருஷ்ணன் ஒழுங்கை அருகில் இரு குண்டு வீச்சு விமானங்கள் திடீர் தாக்குதல்களை மேற்கொண்டன.

நான்கு குண்டுகள் மாறி மாறி வீசப்பட்டதால் ஒருவர் விதானத்தில் உடல் சிதறிப் பலியானார், ஆறு பொதுமக்கள் படுகாயமடைந்தனர் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

ஆறு வீடுகள் சேதமடைந்தன இரு வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

திருமதி ஞானமணி தேவராசா (48) சுன்னாகம், திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் (55) சுன்னாகம். திருமதி சோமேஸ்வரி சிவனந்துரை (54) சுன்னாகம் சந்தையடி வலிபுரம் (65) ஆகியோர் காயமடைந்து யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (47,07)

ஒட்டுசுட்டானில் குண்டு வீச்சு நான்கு பேர் பலி; பலர் காயம்

ஒட்டுசுட்டானில் நேற்று முன்தினம் பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களால் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர் பலர் காயமடைந்தனர்

இராணுவ நடவடிக்கையால் அமைதி பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து ஒட்டுசுட்டான், தண்ணீரூற்றுப் பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்படுகின்றன 47,07

● கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி

சுபாஸ் கீஸிந்தர் மீண்டும் தனிநாடு கோருகிறார்

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணித் தலைவரான சுபாஸ் கீஸிந்தர் மீண்டும் தனிநாடு கோரப்போவதாக அறிவித்துள்ளார்.

தனிநாடு கோரிக்கைக்காக விநியோகிக்கப்பட்ட, வேலைநிறுத்தங்களை கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி உறுப்பினர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியினர் தமது போராட்டத்தை 1986, 1987 இல் கைவிட்டு சுமார் 27 மாதங்கள் இங்கு அமைதி நிலவியது குறிப்பிடத்தக்கது

வல்லை வெளியில் நேற்று ஹெலிகப்டரில் இருந்து சூடு

வல்லை வீதிவழியாக நேற்று போக்குவரத்துச் செய்த வாகனங்களை நோக்கி ஹெலிகப்டர் ஒன்று தாக்குதல் மேற்கொண்டது

நண்பகல் 12.45க்கு வல்லை முனியப்பர் கோவிலடியில் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை நோக்கியும் பிற்பகல் 3மணிக்கு அச்சுவேலி - வல்லைச்சந்தியில் வந்து கொண்டிருந்தவொரு லொறி ஒன்றை நோக்கியும் ஹெலியிலிருந்த சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

உயிர்ச்சேதமோ பொருள் சேதமோ ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது 43

கிளாலியிலும் ஹெலி சூடு

கிளாலிப்பகுதியை நேற்று அதிகாலை வட்டமிட்ட ஹெலிகப்டர் விமானம் அப்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது

கியூபாரா நோக்கிச்சென்ற லொறிகள்-சைக்கிள்கள் வாகனங்களைக் குறிவைத்தே ஹெலிகப்டர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது 07

யாழ்நகரை வட்டமிட்டன

நேற்று யாழ் நகரப்பகுதியை இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் வட்டமிட்டுச் சென்றன

இந்த விமானங்கள் நேற்று பிற்பகல் 4மணியளவில் வட்டமிட்டு பின் தென்மராட்சிப் பகுதியை நோக்கிச் சென்றன 07.47.06

மா வீரர்களுக்கு அஞ்சலி

புலிகளின் வீரமரணமடைந்த மாவீரர்களின் புகழுடல்கள் நேற்று நிதர்சனம் அமைவு அரங்கில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

இம் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக குடாநாட்டின் பல பகுதிகளில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்ததை காணமுடிந்தது. 47

ஊரியான் நோக்கி தொடர் ஷெல் தாக்குதல்

ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று முழுவதும் இராணுவத்தினர் ஊரியான் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதனால் இப்பாதையால் பயணிகள் பிரயாணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றும் நேற்றுமுன்தினமும் இப்பாதையால் பிரயாணம் செய்தவர்கள் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி மீண்டும் யாழ்ப்பாணம் வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 47

பலவேகய - 1 நடவடிக்கை படையினருக்கு இழப்பு

ஆனையிறவு முகாமை மீட்க கடந்த வருடம் இடம்பெற்ற பலவேகய -1 இராணுவ நடவடிக்கை படையினருக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தியதாக பி.பி.ஸி தெரிவித்தது.

அதனால் அதனை படையினர் கைவிட்டனர் எனவும் பி.பி.ஸி குறிப்பிட்டது.

★ கறுப்புடையில் வந்தவர்களால்

இரு சட்டத்தரணிகளுக்கு கொலைப் பயமுறுத்தல்

மனித உரிமைகள் மீறல் தொடர்பான வழக்குகளில் ஆஜராகும் இரு சட்டத்தரணிகளுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது

திரு மோகன் செனிவிரத்னா திரு கனகரட்ணா திலகநாதன் ஆகிய இவ்விரு சட்டத்தரணிகளின் வீடுகளுக்கு இரவு நேரம் சென்ற கறுப்புடை தரித்தவர்கள் இவர்களை எங்கே என கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மறு நாள் மாலையிலும் அந்தக் கறுப்புடை அணிந்தவர்கள் இவ்விரு சட்டத்தரணிகளின் வீடுகளுக்கு வந்து விசாரித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இக்கறுப்புடை அணிந்தவர்கள் வந்த ஜீப் இலக்கத்தகடுகள் காணப்படவில்லை எனவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது

இதைவைத்து இந்த இருசட்டத்தரணிகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

★ லொறி உரிமையாளரின்

வேலை நிறுத்தத்தினால் இந்தியா முழுவதும் பாதிப்பு

லொறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தத்தினால் இந்தியா முழுவதும் பொருள்களுக்கு தட்டுப்பாடும் விலை ஏற்றமும் ஏற்பட்டது

சில மாநிலங்களுக்கு மற்றைய மாநிலங்களில் இருந்தே முக்கிய உணவுப்பொருள்கள் லொறிகளில் கொண்டு செல்லப்பட்டு வந்தன,

இவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நேற்று புதுடில்லியில் மாநிலங்களின் போக்கு வரத்து அமைச்சர்களின் மாநாடு நடைபெற ஏற்பாடாகியது

சிறு விளம்பரம்

நீமியா உரம்

நெற் பயிர், மற்றும் தோட்டப் பயிர்கள் அதிக விளைச்சலைத் தர பூச்சி புழுக்களின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்பட்ட நீமியா உரம். நம்பகமானது, சிக்கனமானது, வேம்பினை ஆதாரமாகக் கொண்டதொரு உள்ளூர் உற்பத்தி நீமியா உரம் கிலோ ரூபா 15/- தொகையாக வாங்கும் வர்களுக்கு சுவைச்சிரமான கழிவு அண்ணா சோப்பி கடைகளிலும் கிடைக்கிறது.

மில்க்வைற் 07003

முடிவு திகதி நீடிப்பு

கலை, இலக்கிய கலாசார நடனத்தும் இலக்கிய நாடகப் பிரதிப் போட்டி முடிவு திகதி 31-7-92 வரை நீடிக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அலங்கார உற்சவம்

கல்கியங்கோடு இராஜேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை திங்கள் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து திங்களும் அபிஷேகமும் பூஜையும் இடம்பெறும்.

இறுதி நாள் திருஊஞ்சல் இடம் பெற்று வீதியுலாவும் காடசி இடம் பெறும்.

★ ராஜீவ் கொலை வழக்கு விசாரணையிலிருந்து நீதிபதி சித்தீக்கை விலக்க எதிரி நளினி மனு!

மூன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரணை செய்து வரும் சென்னை தனி நீதிமன்ற நீதிபதி ஜனாப். சித்தீக்கை இடம் மாற்றுமாறு அக்கொலை வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நடாச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நளினி மனு வொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தான் எதிரியாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ராஜீவ் காந்தி கொலை வழக்கை நீதி பரசர் சித்தீக் விசாரணை செய்யக்கூடாதெனவும், அவரது நடவடிக்கைகள் நீதியானவையாக இருக்குமென்பதில் தனக்கு நம்பிக்கையிலையெனவும் எனவே இக் கொலைவழக்கு விசாரணையிலிருந்து அவரை விடுவித்து மாறுக்குப் பதிலாக வேறு ஒரு நீதிபதியின் மூலம் இவ் விசாரணைகள் தொடரவேண்டுமெனவும் நளினி தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

எனினும் நளினியின் இந்த மனுவைச் சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டதாக பின்னர் கிடைத்த மற்றொரு செய்தி தெரிவிக்கிறது

அனாதைஎன்று கூறிய முதலிவருக்கு கோடி பணம் வந்ததெப்படி?

-மண்ருட்டி ராமச்சந்திரன்

ஜெயலலிதா அரசு நித்தம் நித்தம் பணம் வாங்கும் மொத்த ஊழல் அரசு 20 கோடி ரூபா மதிப்புள்ள அரசு நிலத்தை இரண்டு கோடி ரூபாவுக்கு வாங்கி ஜெயலலிதா ஊழல் புரிந்துள்ளார் எப்போது வேண்டுமானாலும் அ.தி.மு.க அரசை பதவி நீக்கம் செய்வதற்கு இந்திய அரசுக்கு இது ஒன்றே போதும்'

இவ்வாறு மண்ருட்டி ராமச்சந்திரன் எம்.எல்.ஏ, அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்

'பதவிக்குப் போவது பணம் சம்பாதிக்கத்தான் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. அதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நிலக் கொள்முதல் ஊழல் அமைந்துள்ளது. இவ் விடயத்தில் தெரிந்தது தினையளவு தான் நாளை இனும் தெரியாதது பனையளவுக்கு உள்ளது

'எம்.ஜி.ஆர். மறைந்தவுடன் தன்னை அனாதை என்று மேடை தோறும் அறிமுகப்படுத்திய ஜெயலலிதா கோடி கோடியாக சொத்து வாங்குகிறார் என்றால் இது மிகப்பெரிய ஊழல் மோசடி மட்டுமல்ல ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்குவதாகும்' என மண்ருட்டி அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

எம்.ஜி.ஆர் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் எனும் திருநாவுக்கரசு எம்.எல்.ஏ வெளியிட்டிருக்கும் பிறிதொரு அறிக்கையில்

'ஊழல் குற்றத்திற்கு உள்ளாகியுள்ள ஜெயலலிதா அரசு செய்யும் தவறுகளுக்கு காங்கிரசுக் கட்சியும் உடந்தையாக இருக்கிறது என பொது மக்கள் காங்கிரசுக் கட்சி மீது கண்டனத்தைக் காட்டுவதற்கு முன் குறைந்த பட்சம் காங்கிரசுக் கட்சி, ஜெயலலிதாவின் கட்டணியிலிருந்து விலகிக் கொண்டாலாவது இதுபோன்ற குற்றங்களிலிருந்து காங்கிரசு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்' என்றும் தெரிவித்துள்ளார்.

தனியார் துறை ஊழியர்க்கும் ஒய்வூதியம் கிடைக்கும்

தனியார்துறை ஊழியர்களுக்கும் ஒய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கையில் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

தமக்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் பொருட்டுத் தொழில் புரியும் அனைவருமே எதிர்காலத்தில் ஒய்வூதியம் பெறவேண்டும் என்ற வகையிலேயே இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகப் பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சர் பெல்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

வெள்ளைப்பூடு இறக்குமதியை கட்டுப்படுத்த அரசு முடிவு

வெள்ளைப்பூடு இறக்குமதியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முடிவெடுத்துள்ள தாகத் தகவலொன்று தெரிவிக்கிறது.

நான்கு வருடத்தில் வெள்ளைப்பூடு இறக்குமதியை முற்றாகத் தடை செய்யவும் அரசு முடிவெடுத்துள்ளது.

உள்ளூரில் வெள்ளைப்பூடு உற்பத்தி அதிகரித்த வருவதே இதற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

5 வருடங்களின் பின்னர் மீண்டும் ரேஸ்ட் போட்டிகள்

ஐந்து வருடங்களின் பின்னர் இலங்கையில் 'ரெஸ்ட்' கிரிக்கெட் போட்டியொன்று மீண்டும் நடைபெறவுள்ளது

அடுத்த 14 மாதங்களுக்குள் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் கிரிக்கெட் அணிகள் அடுத்தடுத்து இலங்கை வந்து, இலங்கை கிரிக்கெட் அணிகளுடன் 'ரெஸ்ட்' ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளன.

விமானத் தாக்குதல்களினால் பாடசாலைகள் செயலிழந்தன

தற்பொழுது இடம்பெறும் விமானத் தாக்குதல்களையடுத்து தென்மராடசி கிழக்குப் பகுதியிலும், பச்சிலைப்பள்ளி, வடமராடசி கிழக்குப் பகுதிகளிலுமுள்ள பாடசாலைகள் செயலிழந்துள்ளன.

தென்மராடசி கிழக்குப் பகுதியில் கொடிகாமம், மிருசுவில், எழுதுமட்டுவாழ் பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர் வரவு மிகக்குறைவாகவேயுள்ளது

தொண்டமானாறு வெளிக்கள ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளும் பாதிப்புற்றுள்ளன. (29)

மொனராகல அபிவிருத்திக்கு 200 கோடி ரூபா செலவு!

அடுத்த 'கம் உதாவ' ஆண்டு விழா அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள மிகிந்தலையில் நடைபெறவுள்ளது

இது 15 ஆவது 'கம் உதாவ' ஆண்டு விழாவாக அமையும்.

14 ஆவது கம்உதாவ விழாவையொட்டி மொனராகலை மாவட்டத்தில் 200 கோடி ரூபாவுக்கு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

இதே போல் 15 ஆவது கம் உதாவ விழாவை முன்னிட்டு அனுராதபுரத்திலும் பல கோடி ரூபா செலவில் அடுத்த சில வாரங்களுக்குள் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் லலிதாவையும் சந்தித்தனர்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது நான்கு அம்சத் திட்டம் குறித்து ஏழு தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான லலிதா அத்தலத் முதலியைச் சந்தித்து அவருக்கு விளக்கமளித்துள்ளனர்.

ஏற்கனவே இவர்கள் தமது திட்டம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சப்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்களுக்கு விளக்கமளித்துள்ளமையும், விரைவில் பௌத்த பீடாதிபதிகள் உட்பட பௌத்த பேரவை பிரமுகர்களையும் சந்தித்து விளக்கமளிக்கத் திட்டமிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேஜர் முரளி போட்டிகள்

மேஜர் முரளி ஞாபகார்த்த மாக, யாழ், மாவட்டத்தில், ஆரம்பக் கட்டமாகக் கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் கிரான்லிக் கல்லூரி விமதானத்தில், கிரான்லிக் கல்லூரிக்கும், அரியாலை ஸ்ரீ பாரதி வித்தியாலயத்திற்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் 1:0 என்ற கோல்கணக்கில் கிரான்லிக் கல்லூரி வெற்றிபெற்றது. இப் போட்டிக்கு நடுவராக கே. நாகேந்திரம் கடமை யாற்றினார். (16)

இன்று கொழும்புத் துறையில்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று நிலைய திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

அத்துடன் சாந்தன் இசைக் குழுவினரின் 'வேங்கையின் கானம்- விடுதலை கீதங்கள்' இன்னிசை விருந்தும் இடம் பெறவுள்ளது. (47)

ஸ்ரீ சித்திவிநாயகர் உற்சவம்

வடலியடைப்பு புதுறாணை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயவருடாந்த மணவாளக் கோலஉற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு 1008 சங்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா இடம் பெறும்.

அன்று பகல் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (50)

துறட்டிப்பனை மஹோற்சவம்

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று பத்தாவது நாள் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். 18

கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை விரைவில் கொழும்பில்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் ஒன்றிற்கான பரீட்சை கொழும்பில் விரைவில் நடத்தப்படவுள்ளது.

வடகிழக்குப் பகுதியிலிருந்து பிரதேச கல்விப் பணிப்பாளர்களான திரு கு சோமசுந்தரம், செல்வி ரி. பெரியதம்பி ஆகியோர் இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இப் பரீட்சை முடிவுகள் அடுத்த யாழ், பிரதேச கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கும் பரீட்சை வகிக்குமெனவும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

'உற்பத்தி அதிகரித்தாலே- இனி விலைக்குறைப்பு சாத்தியம்'

நாட்டில் உற்பத்தி அதிகரித்தால் மட்டுமே விலைவாசிகளைக் குறைக்க முடியுமென வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் 'கம் உதாவ' விழாவில் தெரிவித்தார்.

உற்பத்தி அதிகரிக்காமல், அதற்கான முயற்சிகளில் ஈடுபடாமல் விலைவாசி அதிகரித்து விட்டது என கூச்சல் போடுவது சாத்தியமற்ற ஒரு முயற்சியே எனவும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர தகுதியுள்ள தலைவர் ஜனாதிபதியே

— பிரதமர்

வடக்கில் இன்று நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தகுதி பெற்ற ஒரேதலைவர் ஜனாதிபதி பிரேமதாஸவே எனப் பிரதமர் டி. பி. விஜயதுங்க புத்தளை 'கம் உதாவ' விழா மேடையில் தெரிவித்தார்

இனாதிபதி பிரேமதாஸ பதவியேற்ற இந்த 3 வருடகாலத்தினுள் நாடு ஐம்பது வருட காலத்துக்குரிய அபிவிருத்தியைக்கண்டுள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

நவசம சமாஜக்கட்சி தனித்துப் போட்டியிடும்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் தனியாகப் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை தமது கட்சி மேற்கொண்டு வருகிறது

மேலதிலும் போட்டித்தகுதிப் பத்திரம் ஒன்றைச் செய்யக்கூடிய சூழ் நிலை இருந்தால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள தாம் தயாராக உள்ளதாக நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்னா தெரிவித்தார்.

தமது கட்சி தனியாகவே போட்டியிட விரும்புவதாகத் தெரிவித்த அவர் இதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான உத்தேச பட்டியலைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வார இராசிபலன்

05 . 07 . 1992 - 11 . 07 . 1992

மேடம்

உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும் இனஜன ஆதரவும் கிடைக்கும் குடும்பத்தினரின் சுபகாரியங்களுக்காக ஓடியாடி திரிவீர்கள். முக்கிய கடமை ஒன்றில் செயற்பட்டு வெற்றி அடைவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் 10, 11 ஆம் திகதிகளில் அவதானமாக இருக்கவும்.

இடபம்

உங்களுக்கு பொருள் நிலையில் ஏமாற்றம் ஒன்று காத்திருக்கின்றது. கவனமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் நண்பர்கள் உதவியாலும் உறவினரால் தூற்றப்படும் பலனைக் காட்டுகிறது. சில வீண் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வேதனை அடைய நேரிடும். 9, 10 ஆம் திகதிகளில் பிரயாணங்களில் அவதானமாக இருக்கவும்.

மிதுனம்

உங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும். குடும்பத்தில் அபிப்பிராய பேதமும், வரவுக்கு மீறிய செலவுகளும் இருக்கும். உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளவும். எதிர்ப்பாலாரின் உதவிகளால் ஓரளவு ஆறுதல் உண்டு. ஆலய தரிசனத்தால் வேதனை குறையும். தூரதேசச் செய்தி மகிழ்ச்சி கொடுக்கும்.

கடகம்

உங்கள் புத்திமதியாலும், நண்பர்களாலும் உதவிகள் கிடைத்து. நற்காரியங்களில் அனுகூலம் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள். பொருள் இழப்புகள் ஏற்படலாம். கவனமாக இருத்தால் தவிர்க்கலாம். குடும்பத்தினரின் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும்.

சிங்கம்

உங்களுக்கு மனதில் அடிக்கடி பயமும் பதட்டநிலையும் ஏற்படும். அலைச்சலும் பலனும் கொடுக்கும். திட்டமிட்டுச் செயற்படவும். தொழில் ஸ்தானத்தில் மனதிற்குப் பிடிக்காத சம்பவம் நடக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உங்களுக்கு ஆலய தரிசனத்தால் வேதனைகள் குறைந்து போக இடம்உண்டு. 7, 8 ஆம் திகதிகளில் கவனமாகப் பிரயாணம் செய்யவும்.

கன்னி

உங்களுக்கு எடுத்த காரியங்களில் ஒரு மந்தநிலை ஏற்படும் இடமாற்றங்கள் சிலருக்கு நன்மைகள் தரும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்பட்டாலும் மேலதிகாரிகளின் ஆதரவால் அனுகூலங்கள் ஏற்படும். தூரதேசச் செய்தியால் நன்மைகள் ஏற்படும்.

துலாம்

உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் வீண்பிரச்சினைகள் ஏற்பட்டு வேதனைதரும். உறவினரின் பிரிவு வேதனை கொடுக்கும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

நல்லூர் சோதிடர்
இ. மகாதேவா

காணி பூமி சம்பந்தமான பேச்சுக்கள் நடக்கும். வியாபார வருத்தம் சிலருக்கு வைத்தியச் செலவைக் கொடுக்கும். உடல் நிலையைக் கவனிக்கவும்.

விருச்சிகம்

உங்களுக்கு சகோதரங்களால் யோசனை அதிகரிக்கும். குடும்பத்தில் எதிர்ப்பாலாரால் எதிர்ப்புக்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் வேலைவக்குறைவு ஏற்பட்டாலும் மேலதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக இருப்பது ஆறுதலைக் கொடுக்கும். மனமுச்சி சத்துராதிகளால் வேதனை ஏற்படும் 9, 11 ஆம் திகதிகளில் கவனமாக இருக்கவும்.

தனு

உங்களுக்கு அடிக்கடி வரும் யோசனைகளாலும், பயத்தாலும் சில அனுகூலமான காரியங்களைத் தவறவிடுவீர்கள். பெரியவர்களின் உதவியால் ஓரளவு நன்மைகள் ஏற்படும் வயிறு, வாய் வருத்தங்கள் சிலருக்கு வரலாம். தந்தை வழியினரால் உதவிகள் கிடைக்கும்.

மகரம்

உங்களுக்கு மனச்சஞ்சலங்கள் ஏற்படும் எக்காரியங்களிலும் ஒரு மந்தப்போக்கு இருக்கும் பிரயாணத்தில் வழிப்பறி அல்லது காயங்கள் ஏற்படலாம் தவிர்த்து நடந்து கொள்ளவும். குடும்பத்தில் சகோதரங்களால் சில பிரச்சினைகள் ஏற்படும் சிலருக்கு இடமாற்றம், வீட்டில் மராமத்துக்கள் ஏற்படலாம் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும் 5, 6 ஆம் திகதிகளில் கவனமாக இருக்கவும்

கும்பம்

உங்களுக்கு சகோதரங்களால் சஞ்சலங்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் கூடியிருந்தவர்களே வீண்பழி சுமத்தித்தொல்லைகள் கொடுப்பார்கள். எதிர்ப்பாலாரால் உதவிகள் கிடைக்கும் உறவினரின் பிரிவு வேதனை தரும் தூரத்துச் செய்தி சாதகமாக இருக்கும் 7, 8 ஆம் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் செய்து ஏமாறாமல் இருந்து கொள்ளுங்கள்.

மீனம்

உங்களின் சொந்தங்கள் வேதனை வரும் எடுத்த காரியங்களில் நன்மையிராது அடிக்கடி அலைச்சலைக் கொடுக்கும். இடமாற்றங்கள் சிலருக்குக் கிடைக்கலாம் பொருள் கஷ்டம் ஏற்படும் உறவினர்கள் உதவி செய்வார்கள். இடமாற்றத்தாலும், பெரியவர்களாலும் நன்மையுண்டு. 9, 10 ஆம் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டாம்.

ஆடிவேலை முன்னிட்டு
கொழும்பில் பலத்த பாதுகாப்பு

கொழும்பில் ஆடிவேல்விழா இம்மாதம் பதினோராம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டு கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

கடந்த 10 வருடங்களுக்குப் பின்னர் இம்முறை ஆடிவேல் விழாவை வெகு விமரிசையாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன,

ஆடிவேல் விழாவை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்புக் கடமையில் 6500 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்

இனாதிபதி பிரேமதாஸ இனாதிபதி மாளிகையின் முன்பாக ஆடிவேல் ரத பவனியை வரவேற்பார் பிரதமர் டி.பி. விஜயதுங்க கொழும்பு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் நடைபெறும் விசேட பூசையில் கலந்து கொள்வார்.

நல்லூர்க் கந்தன் உற்சவம்
ஆகஸட் 3 இல ஆரம்பமாகும்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28 ஆம் திகதி முடிவடையவுள்ளது.

இவ் உற்சவகால ஏற்பாடுகள், ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று இம்மாதம் 10 ஆம் திகதி யாழ்மாநகரசபையினரால் நடத்தப்படவுள்ளது. (14

சிபார்சுகளிலிருந்து தீர்வை
காணும் முயற்சியில் தெரிவுக்குழு

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கென அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு பல்வேறு அரசியல் கட்சிகளினதும் சிபார்சுகளிலிருந்து பொதுவான தீர்வைக் காண்பதில் தற்பொழுது ஈடுபட்டுள்ளது என சபாநாயகர் எம்.எச் மொகமட் புத்தளையில் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக்காண தற்பொழுது சகல தரப்பும் ஆர்வமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மனிதத்தலை வதந்தியால்
சீன தூதரகம் மீது தாக்குதல்

பங்களாதேஷிலுள்ள சீன தூதரக வளவினுள் மனிதத் தலையொன்று கண்டெடுக்கப்பட்டதாக பரப்பப்பட்ட வதந்தியையடுத்து அந்த தூதரகம் அப் பகுதி மக்களினால் தாக்கப்பட்டுள்ளது.

சுமார் 2000 பேர் அடங்கிய கும்பலொன்று தூதரகத்தின் பல பகுதியையும் தாக்கியதினால் கட்டிடத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இச் சம்பவம் குறித்து பங்களாதேஷ் அரசு சீனரிடம் வருத்தம் தெரிவித்துள்ளது.

இத் தூதரகம் அமைந்துள்ள பகுதியில் காணாமற்போன ஒரு சிறுவனின் தலையே இதுவெனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கருதுகிறார்கள்.

6 மாத காலத்தில்
1000 கோடி ரூபா முதலீடு

கடந்த ஆறு மாதங்களில் 1000 கோடி ரூபா பெறுமதியான அந்நிய முதலீடு இலங்கையில் செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடம் 2000 கோடி ரூபா அந்நிய முதலீடு இலங்கையில் செய்யப் படுமென எதிர்பார்க்கப்படுகின்றது என பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

★ ஐ.தே.க. உறுப்பினர்களின்

ஆலோசனைகளை ஆராய
பிரதமர் தலைமையில் விசேட குழு!

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கென தெரிவுக்கப்பட்ட ஆலோசனைகளை ஆராய்வதற்கென ஐக்கிய தேசியக் கட்சி பிரதமர் டி.பி.விஜயதுங்க தலைமையில் தனியான விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

இக்குழு இனப்பிரச்சினை தீர்வுக்காக ஆளுங்கட்சி அமைச்சர்களினாலும், உறுப்பினர்களினாலும் அங்கத்தவர்களினாலும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளை ஆராயும்.

இந்த விசேட குழுவினால் ஆராயப்படும் ஐ.தே.க அமைச்சர்கள், உறுப்பினர்கள், அங்கத்தவர்களின் ஆலோசனைகள் பின்னர் தொகுக்கப்பட்டு தனியான ஆலோசனை அறிக்கையொன்று தயாரிக்கப்படும்.

இந்த தொகுப்பு ஆலோசனையே ஐக்கிய தேசியக்கட்சியின் இன பிரச்சினைத் தீர்வு ஆலோசனையாக மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பிரதமர் தலைமையிலான இந்த விசேட குழு அதன் முதலாவது கூட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி பிரதமரின் அலுவலகத்தில் கூடவுள்ளது

இந்த விசேட குழுவே நியமனக் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணும் முயற்சிக்கு ஒரு திருப்பமாக அமையுமென இது குறித்த செய்தியை வெளியிட்ட கொழும்புப் மத்திரிகைகள் விமர்சித்துள்ளன,

மதவழிபாட்டு ஸ்தலத்திலிருந்து
பெருமளவு ஹெரோயின் மீட்பு

சிகரபத்திலுள்ள மதவழிபாட்டு இடமொன்றிலிருந்து 40 இலட்சம் ரூபா பெறுமதியான "ஹெரோயின்" போதைப் பொருள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்த மதவழிபாட்டு இடத்தினுள் பொலிஸார் பிரவேசித்த வேளை அங்கு எவரும் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

சிறுவர் பண்ணைகள்
கட்டுப்படுத்தப்படும் ஜனாதிபதி

சில சக்திகள் இன்று நாட்டுக் சிறுவர் பண்ணைகளை நடத்திவருகின்றன இவற்றை கட்டுப்படுத்த அரசு சட்டத்தைக் கொண்டுவரும்

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸநேற்று கம்உதாவ இறுதி நாள் நிழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

சிலபெற்றோர்கள் தமது பிள்ளைகளை வளர்க்க முடியாது கஷ்டப்படுகின்றதை சாதகமாகப் பயன்படுத்தி லாபம் ஈட்டவே இந்த சக்திகள் சிறுவர் பண்ணைகளை நடத்துகின்றனர் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்கட்சி எம். பி.யும் முன்னாள் அமைச்சருமான ஒருவர் சிறுவர் பண்ணையை நடத்தி வருவதைக் குறிப்பிட்டே ஜனாதிபதி இவ்வாறு கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது

பழனியாண்டவர் உற்சவம்

கொழும்புத்துறை மேற்கு. ஸ்ரீ பழனியாண்டவர் கோயில் தேரஸ்தான கலங்கார உற்சவம் நாளை 6 ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து இம் மாதம் 17 ஆம் திகதி 108 சங்குகள் வைத்து விசேட அபிஷேகம் இடம்பெறுவதோடு பிற்பகல் 5 மணியளவில் முருகப்பெருமான் வெளி வீதி உலாவும் இடம் பெறும். 47

பங்கீட்டு முறையில் மண்ணெண்ணெய்

அக்கரவேலி ப.நோ.கூ. சங்கம் பங்கீட்டு அட்டைக்கு ஒவ்வொரு லீற்றர் மண்ணெண்ணெய் 25 ரூபாவுக்கு மாவலையாளுக்கு வழங்கிவருகிறது. 43

நீடிக்கக் கோரிக்கை

உடற் கல்வி மற்றும் விளையாட்டு ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்குமாறு கல்விச்சேவைகள் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

★ சபாநாயகர் மொகமட்

தெரிவுக்குழுவின் தீர்வு நீதியாக அமைய வேண்டும்

பாராளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான நீதியான தீர்வுக்கு வரமுடியும் என சபாநாயகர் எம் எச் மொகமட் கம்உதாவ நிகழ்ச்சியில் பேசுகையில் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரு சமுதாயத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் எந்தவொரு தீர்வையும் காணமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தீர்வை வகுப்பதில் ஈடுபடுகின்றவர்கள் பல்வேறு சமூகங்களின் நலன்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

எந்த நெருக்கடியிலும் அபிவிருத்தி வேலைகள் -பிரதமர்

நாட்டில் எந்த நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அபிவிருத்தி வேலைகள் பாதிப்பின்றி நடைபெறும் என பிரதமர் டி. பி. விஜேதுங்க கம்உதாவ இறுதி நாள் நிகழ்ச்சியில் நேற்றுக் கூறினார்.

வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய தலைவர் ஜனாதிபதி பிரேமதாஸவே எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட யுவதிகளுக்கு தொழிற் பயிற்சித் திட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பதின்மூன்று தொழிற்பயிற்சி நெறிகளை ஊனமுற்ற, அநாதரவான, ஆதரவற்றோர், உழைப்பாளரை இழந்தவரும் பகுதி என்பனவற்றில் உள்ள 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளம்யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி யளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படும் பயிலுனர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக மாதம் ஒன்றுக்கு 450 ரூபா வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு கிளையில் இருந்தும் 34 தொழிற்பயிற்சி பயிலுனர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இப்பயிற்சியில் தையல், வலைநார், தென்னைப் பொருள் உற்பத்தி, பனம் பொருள் உற்பத்தி, பிரம்பு, உணவுப்பதப்படுத்தல்போன்றவை தொழிற் பயிற்சியும்.

மற்றும் களஞ்சிய எழுதுவினைஞர் பொது எழுதுவினைஞர் கணக்கு எழுதுவினைஞர் உதவித் தாதியர் பயிற்சி, ஆங்கில, தமிழ் கருக்செழுத்துப்பயிற்சிகளும் நடைபெறவுள்ளன 06

கிளிநொச்சிப் பகுதியில் கொழும்பு யாழ். பயணிகள்

கல்விடைக்காடு மோதல் சம்பவங்களையடுத்து ஊரியான் பாலத்து பாதிக்கப்பட்டுள்ளதால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகின்ற பயணிகள் கிளிநொச்சிப் பகுதியில் தங்கியிருப்பதாக வந்த வர்கள் தெரிவித்தனர்.

சிலர் நிலைமையை அறிந்து வவுனியாவில் இருந்து மீண்டும் கொழும்பு திரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது 47

பாகிஸ்தான் பொலிஸ் நிலையம் இளைஞர்களால் சுற்றிவளைப்பு

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தை ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியொன்று சுற்றிவளைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவை 5 அரசியல் தலைவர்கள் பொலிஸாரானதை செய்யப்பட்ட சம்பவத்தை படுத்தே இவர்கள் சுற்றிவளைத்தனர்.

இராணுவம் விரைந்ததுக்கு வந்ததும் 30 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்,

உதவித்தாதி பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன கணவனை இழந்தோர், ஊனமுற்றோர், அநாதைகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் விண்ணப்பங்கள் வரும் 16 07. 92 வியாழக்கிழமைக்கு முன்பாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். 18 07 92 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
03. 07 92. 7011

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷாக (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் 156 வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்ஸ்மி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 05-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

வரலாற்றில் அதிசயம் படைத்த கரும்புலிகள் நாள் இன்று

எமது தாயகத்தின் விடிவிலுக்காக ஒவ்வொரு விடுதலைப்புலியும் இந்த மண்ணில் சரியும்போது ஒவ்வொரு சரித்திரம் பிறக்கிறது அந்த வகையில் கரும்புலிகளின் வீரச்சாவுகள் சரித்திரமானவை தான் சாகப்போகும் நிகழ்வை நேரத்தை,தன் உடல் எப்படிச் சிதறப்போகிறது என்பதை தெரிந்துகொண்டு மனநிறைவோடு, மகிழ்ச்சியோடு அதனை அரவணைத்துக் கொள்கின்றனர்

இவ்வாறு விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு கரும்புலிகள் நாளையொட்டி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

உலக வரலாற்றில் இது அதிசயம் மட்டுமல்ல அதிர்ச்சியை ஏற்படுத்திவரும் அற்புதமான உண்மை. எதிரியானவன் எத்தகைய பெரிய இராட்சத கவசவண்டிகளை கப்பல்களை கொண்டு வந்தாலும் எவ்வளவு பெரிய தளத்தை அமைத்தாலும்எமது உடல்களால் அத்தகையையும் தகர்த்தெறிய முடியுமென்பதை இவர்கள் நிரூபித்துக் காட்டியவர்கள்.

எத்தகைய தடைகள் வந்தாலும் தளராதஎமது தலைமை எமது தாயகத்தை விடுவித்து எமது மக்களுக்கு சுதந்திரமான, சுபிட்சமான வாழ்வைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை இவர்கள் தங்கள் நெஞ்சங்களிலே சுமந்து சென்றவர்கள்.

இந்தக் கரும்புலிகளின் காவிய வரலாற்றின் முதல் கரும்புலி கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன் - தன்னாலை வீரச்சாவு:- 05-07-1987) ஆரம்பித்து வைத்தவர்.

இந்த வரலாற்றில் இதுவரை கரும்புலி கப்டன் கொவின்(பர்னாந்து சிங்வெல்சர் -மன்னார் வீரச்சாவு 10-07-1991), கரும்புலி கப்டன் கனோத் (வேலுப்பிள்ளை நிலராஜா - வல்வெட்டித்துறை வீரச்சாவு:- 10-07-1991), கரும்புலி மேஜர் லாந்தறூபன் (யோகராசா சோமேஸ்வரன் - வல்வெட்டித்துறை வீரச்சாவு:- 10-07-1991), கரும்புலி மேஜர் டாம்போ (விதயாபரன்-முழங்காவில் வீரச்சாவு 19-03-1991), கரும்புலி வெப் சேணன் பேரின்(மா. அரசரெத்தினம் - மேமமடு வீரச்சாவு:- 23-11-1990), கரும்புலி கப்டன் சிதம்பரன் (பெரியதம்பி சந்திரன் - வல்வெட்டித்துறை வீரச்சாவு:- 05-05-1991 . கரும்புலி கப்டன் ஜெயந்தன் (கறுப்புக்குட்டி பரமநாதன் - மட்டக்களப்பு வீரச்சாவு:-05-05-91) ஆகிய வீர மறவர்களும் இணைந்து கொண்டனர்

இந்த உணர்வோடு தான் இன்று ஒவ்வொரு விடுதலைப்புலியும் போராடிக் கொண்டிருக்கின்றான் எமது தாயக விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதற் கரும்புலியின் நாளாகிய இன்று இதுவரை கரும்புலிகளாக வீரச்சாவடைந்த எட்டுக் கரும்புலிகளையும் நினைவு கொள்கின்றோம்

இக்கரும்புலிகள் நினைவாக பிரிவு ரீதியாக நினைவுக் கூட்டங்கள் முறையே வலிகாமம் தீவகம் பிரிவு: மானிப்பாய் மாவீரர்களை அரங்கு, வடமராட்சிப்பிரிவு: நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், தென்மராட்சிப் பிரிவு

ஆகிய இடங்களில் குறித்தபடி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்

ஊரடங்குச் சட்ட நேரம் விண்ணப்பம் ஏற்பதில்லை

யாழ் மாவட்ட மேலதிகபதிவாளர் அலுவலகத்தில் ஊரடங்கு காலத்தில் இருக்கும் காலங்களில் பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பம் ஏற்கும் கருமபீடம் இயங்குவதில்லை

இதே வேளை அவ்வலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் பிறப்பு இறப்பு விவாகச் சான்றிதழ்கள் எழுதும் பணியில் துரிதமாக ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது

இதே நேரம் செயலகத்தின் ஏனைய பகுதிகளில் வேலைகள் நடைபெறுகின்றன 06

கண்டி, காலி ரயில் பாதைகள் திருத்த ஜப்பான் உதவி

கொழும்பு- காலி, கண்டி-களனி ரயில் பாதைகளை திருத்த ஜப்பான் அரசு உதவி செய்யவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது

இதற்கு 138 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பழைய ரயில் தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும் அகற்ற பட்டு புதியவை அமைக்கப்படவுள்ளன.

★ இதுவரை கடமைக்கு வராத

மன்னார் அரச ஊழியர்கள் 15 ஆம் திகதி சமுகம் தரவேண்டும்

மன்னார் மாவட்டத்தில் இது வரையும் கடமைக்கு சமுகம் தராத அரசாங்க ஊழியர்கள் மாவரும் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மன்னார் செயலகத்துக்கு சமுகம் தரவேண்டும் என கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

1990 ஆண்டு மாதம் புதிதாக ஆரம்பமானதையடுத்து மன்னார் பகுதியிலுள்ள பல அரச ஊழியர்கள் இடம் பெயர்ந்து வெளியிடங்களுக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

தமிழர்கள் குடியேற்றம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பஞ்சந்தொடுவாய் பகுதியில் படை முகாம்களுக்கு அருகில் தமிழ்க் குடும்பங்கள் பலவந்தமாக குடியமர்த்தப்படுகின்றனர்.

சுமார் 420 தமிழ்க் குடும்பங்கள் இவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவில் பாதிப்பு

முல்லைத்தீவு - மணலாறு மாவட்டப்பிரதேச சங்கங்களில் கடந்த இரண்டு வருடங்களுக்குமேலாக இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக 60 குடும்பத்திற்கு மேற்பட்ட மீனவக்குடும்பங்கள் தொழிலற்றநிலையில் பாதிக்கப்பட்டிருக்கின்றன

16 கிமக கடற்பிரதேசத்தில் மீன்பிடித்து வந்த இப்பகுதி மீனவர்களுக்கு தற்போதைய நிலையில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது 07

★ விம்பிள்டன் ரென்னிஸ்

அன்ற அகஸியும் கொறானி இவான் சிவிக்கும் இறுதி ஆட்டம்

நேற்று நடைபெற்ற விம்பிள்டன் ரெனிஸ் ஆண்கள் அரை இறுதிப் போட்டியில் அமெரிக்க ஆட்டக்காரரான ஜோன் மக்கென்றோ சக அமெரிக்க ஆட்டக்காரரான அன்றி அகஸியிடம் 6-4; 6-2; 6-3 என்ற செற்கணக்கில் தோல்வியுற்றார்

மற்றைய அரை இறுதி போட்டியில் குறோசியநாட்டவரான கொறானி இவான் சிவிக் பிற்சான்றெஸ் என்ற அமெரிக்க ஆட்டக்காரரை 6-7; 7-6; 7-4; 6-2 என்ற செற்கணக்கில் வென்றார்.

எனவே ஒற்றையர் ஆட்ட இறுதிப் போட்டி அன்றி அகஸியும்கொறானி இவான் சிவிக்கும்தமிடையே நடைபெறும்

நற்பேறைய சம்பியன் கிரெபி கிறாப்புக்கும் மெனிக்கா செலர்ஸக்கும் மிடையில் நடைபெற்ற பெண்கள் ஒற்றையரிடம் மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்

சாவகச்சேரியிலும் வட்டமிட்டன

சாவகச்சேரி பகுதியில் இரண்டு மூன்று விச்சு விமானங்கள் நேற்றுக் காலை வட்டமிட்டு நோட்டம் பார்த்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சந்தைகள், கடைகள் என்பன மூடப்பட்டன. மக்கள் அங்கும் இங்குமாக சிதறி ஓடி மறைந்தனர். 47, 07

இரு தமிழர் கைது

மூதூர் ஜி பி எல் முகாமுக்கு சென்ற இரு தமிழர்கள் முகாமினுள் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்

செல்வலிங்கம் ஆனந்தன் நந்தகுமார் சிவராஜா ஆகிய இவர்கள் டைப்பறிச்சான் வரிகளே கைதானவர்களாவர். 47